செய்தி வெளியீடு எண்: 532 நாள்:26.08.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.8.2019) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வரலாற்றில் முதல் முறையாக மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கான முதல் புதிய மின்சார பேருந்தினை, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

சுற்றுப்புறச் சூழல்களை பாதுகாக்கின்ற வகையிலும், காற்று மாசுபடுவதை குறைக்கின்ற வகையிலும், மின்சாரத்தில் இயங்கிடும் பேருந்துகளை தமிழ்நாட்டில் இயக்கிட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்திலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கடந்த 28.3.2018 அன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்கும், லண்டன் மாநகரத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் C-40 முகமைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதனைத் தொடர்ந்து, மத்திய அரசின் FAME INDIA-2 திட்டத்தின் கீழ், இந்தியா முழுவதுமான, 64 நகரங்களுக்கு, 5,595 மின்சாரப் பேருந்துகள் இயக்கிட இசைவு அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, தமிழ்நாட்டில், சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு, திருப்பூர், சேலம், வேலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களுக்கு 525 மின்சாரப் பேருந்துகள் வாங்கி இயக்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மின்சார பேருந்துகள் செயல்பாட்டில் வருவதற்கு முன்னோட்டமாக, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஒரு புதிய மின்சார பேருந்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த மின்சாரப் பேருந்து பரிசோதனை அடிப்படையில், நாள்தோறும் சென்னை புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய இரயில் நிலைய பேருந்து நிலையத்திலிருந்து A1 வழித்தடமான மயிலாப்பூர், அடையார் வழியாக திருவான்மியூர் வரை, காலை 2 நடையும், மாலை 2 நடையும் இயக்கப்படும். முழுமையாக குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ள இப்பேருந்தில் தானியங்கி கதவுகளும், வழித்தடங்களை

அறியக்கூடிய GPS வசதியும் உள்ளது. **32** இருக்கை வசதிகள் கொண்ட இப்பேருந்து, இந்திய போக்குவரத்து தரக் கட்டுப்பாடு (ARAI) அமைப்பினால் தகுதி சான்று அளிக்கப்பட்டுள்ளது. இப்பேருந்தில், மின்கலன் இருப்பு நிலை (Battery's States of Charge) மற்றும் வெப்பநிலை (Temperature), ஓட்டுநரின் செயல்பாடு, பேருந்தின் செயல்பாடு, பேருந்தில் ஏற்படும் மின்கசிவினை கண்டறிந்து அதை தானாக செயலிழக்க வைத்தல் (FDSS - Fire Deduction and Suppression System) ஆகியவற்றை ஒருங்கிணைத்து ரிமோட்டில் கண்காணிக்கக்கூடிய I - Alert System என்ற நவீன தொழில்நுட்ப அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு.கோ.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**